SOSA-I-M

# முதலாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 60

வகுப்பு - ஐந்து

நேரம்: 2 மணி

---

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** **5 × 1 = 5**

1. கணித மேதை என்றழைக்கப்படுபவர் ________________

   அ) இராமானுஜர்  ஆ) சர்.சி.வி.ராமன்  இ) அப்துல்கலாம்

2. இம்மை என்ற சொல் குறிக்கும் பொருள் ________________

   அ) முற்பிறப்பு  ஆ) மறுபிறப்பு  இ) இப்பிறப்பு

3. மழையை வாங்கி தனக்குள் சேமிக்கும் கலன் ________________

   அ) கிணறு  ஆ) மண்  இ) கடல்

4. பாடப்பகுதியிலுள்ள ‘கடல் என்ற பாடலைப் பாடியவர் ___________

   அ) கவிமணி தேசிக விநாயகனார்  ஆ) பாரதிதாசன்

   இ) ஔவையார்

5. கேடில் விழுச்செல்வம் ________________

   அ) பொருள்  ஆ) கல்வி  இ) உயர்வு

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5 × 1 = 5**

1. பாரதிதாசன் இயற்றிய நூல் ________________
2. மூதுரை நூலின் ஆசிரியர் ________________
3. ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் ________________ எனப்படும்.
4. ஆழம் தெரியாமல் ________________ விடாதே.
5. ‘தப்பி பிழைத்த மான்’ பாடத்தில் மானை ஏமாற்றியது ______________

**II. அ) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.** **3 × 1 = 3**

அ) பல்லுக்குறுதி  ஆ) என்றெண்ணி  இ) நற்றமிழ்

**ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.** 3 × 1 = 3

அ) பனி + மலர் ஆ) வரும் + அளவும்

இ) கண் + இமைக்கும்

**இ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுக.** 3 × 1 = 3

அ) மகிழ்ச்சி ஆ) அறிவிலர் இ) வறுமை

**ஈ) பின்வரும் சொற்களுக்குப் பொருள் கூறுக.** 3 × 1 = 3

அ) புரவி ஆ) உறுமீன் இ) கழை

**உ) பின்வரும் சொற்களை வாக்கியத்தில் அமைத்து தொடர் உருவாக்குக.** 2 × 1 = 2

அ) இனிமை ஆ) கணினி

**ஊ) பொருத்துக.** 4 × 1 = 4

| | | |
|---|---|---|
| அ) நனி | - | அலப்பும் |
| ஆ) குரங்கு | - | கவிமணி தேசிக விநாயகனார் |
| இ) மகரம் | - | மிகுதி |
| ஈ) ஆசிய ஜோதி | - | மீன் |

III. **அ) பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஆறனுக்கு விடையளி.** 6 × 2 = 12

1. பாரதிதாசன் எதனை ‘என் உயிர்’ என்று கூறுகிறார்?
2. பண்பால் சிறந்தவர்களாக ஆரீஸ் எவரையெல்லாம் குறிப்பிடுகிறார்?
3. மரபு என்றால் என்ன?
4. யாரை அறிவில்லாதவர் என எண்ணி விடக் கூடாது என ஔவையார் குறிப்பிடுகிறார்?
5. களர் நிலத்துக்கு ஒப்பாவர் - யார்?
6. சிறுவனின் நேர்மைக்குக் கிடைத்த பரிசு யாது?
7. கிளியை “பழமொழிக் கிளி” என அழைக்கக் காரணம் என்ன?

**ஆ) பின்வரும் பாடலுக்கு அடிமாறாமல் பிழையின்றி எழுதுக.** 1 × 4 = 4

1. ‘மூதுரை’ பாடலில் ‘அடக்கம்’ எனத் தொடங்கி ‘கொக்கு’ என முடியும் வரையுள்ள பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 × 6 = 6

1. குடிநீர் வேண்டி ஊராட்சி மன்றத் தலைவருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.
2. கல்விச் செல்வம் அல்லது பொருட்செல்வம் இரண்டில் ஒன்று தான் உனக்கு வழங்கப்படும் எனில் நீ எதைத் தெரிவு செய்வாய்? ஏன்?
3. சகோதரியின் திருமணத்திற்குச் செல்ல வேண்டி மூன்று நாட்கள் விடுப்பு தருமாறு வகுப்பாசிரியருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.

**V. பின்வரும் வினாவிற்கு அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு விடை எழுதுக.**
10 × 1 = 10

1. கம்மிங் பிரைடே டெம்பிலுக்கு செல்வோம். (தூய தமிழில் எழுதுக.)
2. மணிமேகலை (சொல்லிலிருந்து புதிய சொல் உருவாக்குக.)
3. அமலா நடனம் ஆடினாள். (இத்தொடரில் உள்ள பெயர்ச்சொல், வினைச்சொல் எடுத்து எழுதுக.)
4. மிஞ்சினால் அளவுக்கு நஞ்சு அமிழ்தமும் (இடம் மாறியுள்ள பழமொழியை முறையாக எழுதுக.)
5. மாதவி சித்திரம் தீட்டினாள் (எழுவாய், பயனிலைகளை எழுதுக.)
6. Cyclone, Farmer (ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் எழுதுக.)
7. கையில் அணிவது _______________ (வலை , வளை)
8. அரை, அறை (புதிய சொற்றொடர் உருவாக்குக.)
9. கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
   கழையிடை ஏறிய சாறும்

   (இப்பாடலில் உள்ள முதல், இரண்டாம் எழுத்து ஒன்று போல் வருவதை எழுதுக.)
10. சிங்கம் _______________, மயில் _______________. (ஒலி மரபுச் சொற்களை எழுதுக.)